# NR IAS ACADEMY

**THE INSTITUTE FOR IAS, IPS, IRS (ALL UPSC & TNPSC EXAMINATIONS)**
H.O: **Chatiram Bus Stand (Opp. Kalaignar Arivalayam), Trichy - 620 002**
☎ **98425 54825, 7305784825**
www.nriasacademy.com, www.nrcurrentevents.com email:vijay.nriasacademy@gmail.com

# CCSE GOV Question General Tamil 2018

1. தொண்டு செய்து பழுத்தபழம் என்று பாரதிதாசன் போற்றுவது
   A. பாரதியார்
   **B. தந்தை பெரியார் ✓**
   C. காந்தியார்
   D. அண்ணாதுரையார்
   **Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.21**
2. பாரதியார் யாருடைய சாயலில் வசனகவிதை எழுதிட தொடங்கினார்?
   A. ஜார்ஜ் எல். ஹார்ட்
   **B. வால்ட்விட்மன் ✓**
   C. லிண்ட் ஹோம்
   D. ஹால் சிப்மேன்
   **Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.19**
3. நாமக்கல் கவிஞரின் படைப்புகளின் எண்ணிக்கையை பொருத்துக
   a. இசை நாவல்கள் - 1. நான்கு
   b. புதினங்கள் - 2. பத்து
   c. கவிதைத் தொகுப்புகள் - 3. மூன்று
   d. மொழி பெயர்ப்புகள் - 4. ஐந்து
   a b c d
   A. 4 3 1 2
   **B. 3 4 2 1 ✓**
   C. 2 4 1 3
   D. 3 1 4 2
   **Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.173**
4. "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்" - என இளைஞர்களுக்கு உரைத்தவர் யார்?
   A. தமிழ்த் தென்றல் திரு.வி.க
   **B. பெரியார் ✓**
   C. பாவேந்தர் பாரதிதாசன்
   D. தாரா பாரதி
   **Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.22**
5. குமரகுருபரரின் 'நீதி நெறி விளக்கம்' என்னும் நூலில் எத்தனை பாடல்களுக்கு பரிதிமாற்கலைஞர் உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்
   A. முப்பத்து மூன்று
   B. ஐம்பது
   **C. ஐம்பத்தொன்று ✓**
   D. ஐம்பத்து மூன்று
   **Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.11**
6. தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழமையானது எங்குள்ளது?
   **A. பிள்ளையார்பட்டி ✓**
   B. கழுகு மலை
   C. திருப்பரங்குன்றம்
   D. ஆனைமலை
   **Ref: NR IAS ACADEMY's 12th Tamil Book, Pg.175**
7. தன் இனத்தையும் மொழியையம் பாடாத கவிதை வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை - என்று பாடியவர் யார்?
   A. பாவேந்தர் பாரதிதாசன்
   B. உமர் கய்யாம்
   **C. இரசூல் கம்சு தோவ் ✓**
   D. க. வைரமுத்து
   **Ref: NR IAS ACADEMY's 12th Tamil Book, Pg.75**
8. 'நோய்க்கு மருந்து இலக்கியம்' என்று கூறியவரை தேர்வு செய்க
   A. உ.வே. சாமிநாதர்
   **B. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ✓**
   C. பரிதிமாற்கலைஞர்
   D. மறைமலை அடிகளார்
   **Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.23**
9. திருப்பனந்தாளிலும், காசியிலும் தம் பெயரால் மடம் நிறுவி உள்ளவர்
   A. இராமலிங்க அடிகளார்
   B. தாயுமானவர்
   **C. குமரகுருபரர் ✓**
   D. வில்லிபுத்தூரார்
   **Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.174**
10. மயிலேறும் பெருமாளிடம் கல்வி கற்றவர்
    **A. சுவாமிநாத தேசிகர் ✓**
    B. வீரமாமுனிவர்
    C. சி. இலக்குவனார்
    D. மீனாட்சி சுந்தரனார்
    **Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.133**
11. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
    திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"
    இத் திருமந்திரப்பாடல் இடம் செய்ய தந்திரம் எது?
    A. ஆறாம் தந்திரம்
    B. இரண்டாம் தந்திரம்
    **C. மூன்றாம் தந்திரம் ✓**
    D. எட்டாம் தந்திரம்



NR IAS ACADEMY
This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.97**

12. 'அங்கவியல்'. திருக்குறலில் எந்தப் பகுப்பில் இடம்பெற்றுள்ளது?
    A. அறத்துப் பால் **B. பொருட்பால் ✓**
    C. காமத்துப் பால் D. எதுவுமில்லை

**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Book, Pg.35**

13. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
    எழுமையும் ஏமாப்பு உடைத்து
    இக்குறளில் ஏமாப்பு என்பதன் பொருள் யாது?
    A. பெருமை B. ஏமாற்றம்
    **C. பாதுகாப்பு✓** D. பொறுமை

**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.106**

14. "கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்" என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
    **A. திருவாசகம் ✓** B. மதுரைக் காஞ்சி
    C. பட்டினப்பாலை D. தமிழ்விடுதூது

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.130**

15. தமிழ், வடமொழி அல்லாது மற்றொரு மொழியிலும் குமரகுருபரர் புலமை மிக்கவராக திகழ்ந்தார். அம்மொழி எதுவெனத் தேர்ந்தெடு
    A. பாலி **B. இந்துஸ்தானி✓**
    C. கன்னடம் D. உருது

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.174**

16. 'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய' - இத்தொடரில் உள்ள "துகிர்" என்பதன் பொருளை தேர்ந்தெடுக்க
    A. மாணிக்கம் B. மரகதம்
    C. இரத்தினம் **D. பவளம்✓**

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.88**

17. "தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த" இந்த வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
    A. பெருங்கதை B. சீவகசிந்தாமணி
    **C. பதிற்றுப்பத்து✓** D. பரிபாடல்

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.158**

18. உத்தம சோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர்
    A. கம்பர் **B. சேக்கிழார்✓**
    C. புகழேந்தி D. ஒட்டக்கூத்தர்

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.111**

19. 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'
    இவ்வடிகளில் இடம்பெறும் பறவையினை தேர்ந்தெடுக்க
    A. காகம் B. கிளி
    **C. புறா✓** D. ஆந்தை

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.33**

20. பிழையற்ற வாக்கியம் எது?
    A. ஓர் மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்
    B. ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்
    **C. ஒரு மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்✓**
    D. ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு கூற்றுலா மேற்க்கொண்டார்

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.95**

21. 'எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர்' எவ்வகைத் தொடர் என்று தேர்ந்தெடு
    A. செயப்பாட்டு வினைத் தொடர்
    B. கட்டளைத் தொடர்
    C. அயற்கூற்றுத் தொடர்
    **D. செய்வினைத் தொடர்✓**

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.26**

22. பொருத்துக
    a. என்றல் - 1. முற்றும்மை
    b. நுந்தை - 2. குறிப்பு வினைமுற்று
    c. யாவையும் - 3. மரூஉ
    d. நன்று - 4. தொழிற்பெயர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A.** | **4** | **3** | **1** | **2✓** |
| B. | 3 | 4 | 2 | 1 |
| C. | 2 | 4 | 1 | 3 |
| D. | 4 | 3 | 2 | 1 |

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Different pages**

23. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' - என்னும் புணர்ச்சி விதிப்படி புணர்ந்துள்ள சொல் எது?
    **A. கற்றா✓** B. கன்றா
    C. கறா D. கன்று

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.162**

24. "விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி"
    இக்குறட்பாவில் காணலாகும் மோனை எது?
    **A. மேற்கதுவாய் மோனை✓**
    B. கீழ்க்கதுவாய் மோனை
    C. கூழை மோனை
    D. ஒரூஉ மோனை

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.213**

25. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
    A. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது
    **B. வினைத்தொகையில் வல்லினம் மிகாது✓**
    C. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகாது
    D. உவமைத் தொகையில் வல்லினம் மிகாது.

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.144**

26. தொகை நிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி நின்று பொருள் தருவது எது என தேர்ந்தெடு
    A. பண்புத்தொகை
    **B. அன்மொழித்தொகை✓**
    C. வினைத்தொகை
    D. உவமைத்தொகை

NR IAS ACADEMY



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.73**

27. "உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்து விட்டாலும் திருக்குறளும் கம்பன் காவியமும் இருந்தால் போதும்; மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம் என்று கூறியவர் யார்?
    A. ஜி.யு. போப் **B. கால்டுவெல்✓**
    C. பாரதிதாசன் D. பாரதியார்

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.67**

28. நாடகம் படைத்தல், நடித்தல், நாடக இலக்கணம் இயற்றல் ஆகிய முக்கோணங்களிலும் நாடகத் தொண்டாற்றியவர் யார்?
    A. தவத்திரு சங்கரதாஸ்
    B. பரிதிமாற் கலைஞர்
    C. பம்மல் சம்பந்தனார்
    D. திண்டிவனம் ராமசாமிராஜா

29. கீழ்க்கண்டவற்றுள் பறவைகள் சரணாலயம் இல்லாத இடத்தைத் தேர்ந்தெடு
    A. கரைவெட்டி **B. கோவன்பத்தூர்✓**
    C. வெள்ளோடு D. சித்திரங்குடி

**Ref: NR IAS ACADEMY's 6th Tamil Book, Pg.10**

30. கீழ்க்கண்டவற்றுள் தேவநேயப் பாவாணரின் சிறப்புகளில் பொருந்தாததை தேர்ந்தெடு
    A. செந்தமிழ் ஞாயிறு
    B. செந்தமிச் செல்வர்
    **C. இலக்கியச் செம்மல்✓**
    D. தமிழ்ப்பெருங்காவலர்

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.139**

31. 'உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு' என்னும் நூலை எழுதியவர் யார்?
    A. இபான்
    B. எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை
    **C. தால் சுதாய்✓**
    D. முனைவர் எமினோ

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.182**

32. பொருத்துக

| | | | | |
|---|---|---|---|---|
| a. | பெருஞ்சித்திரனார் | - | 1. | காவியப்பாவை |
| b. | சுரதா | - | 2. | குறிஞ்சித்திட்டு |
| c. | முடியரசன் | - | 3. | கனிச்சாறு |
| d. | பாரதிதாசன் | - | 4. | தேன்மழை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 2 | 3 | 4 | 1 |
| **B.** | **3** | **4** | **1** | **2✓** |
| C. | 2 | 4 | 1 | 3 |
| D. | 4 | 3 | 2 | 1 |

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Different pages**

33. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகளுள் இல்லாத ஒன்று எது?
    A. கொய்யாக்கனி
    B. கனிச்சாறு
    **C. கல்லக்குடி மாகாவியம் ✓**
    D. நூறாசிரியம்

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.110**

34. தருமிக்கு பொற்கிழி அளித்த படலம் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது
    A. மதுரைக் காண்டம்
    B. சுந்தர காண்டம்
    **C. திருவாலவாய்க் காண்டம்✓**
    D. கூடற் காண்டம்

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book,**

35. 'அஷ்டப்பிரபந்தம்' கீழ்க்கண்டவற்றுள் எதனைக் குறிக்கும்?
    **A. எட்டு சிற்றிலக்கியங்கள்✓**
    B. எட்டு பெருங்காப்பியங்கள்
    C. ஆறு நூல்கள்
    D. ஒன்பது உரைகள்

**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Book, Pg.84**

36. காந்திபுராணத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை
    A. ஓராயிரத்து முப்பத்து நான்கு
    **B. ஈராயிரத்து முப்பத்து நான்கு✓**
    C. மூவாயிரத்து முப்பத்து நான்கு
    D. நான்காயிரத்து முப்பத்து நான்கு

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.63**

37. "நல்லது செய்த லாற்றீ ராயினும்
    அல்லது செய்த லோம்பு மினது தான்"
    - என்ற வரிகள் இடம் பெற்ற நூல் எது?
    A. அகநானூறு **B. புறநானூறு✓**
    C. திருக்குறள் D. ஐங்குறுநூறு

**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Book, Pg.14**

38. மறைமலையடிகளாரின் மகள்
    A. கமலாம்பிகை அம்மையார்
    B. கௌசவல்லி அம்மையார்
    **C. நீலாம்பிகை அம்மையார்✓**
    D. ஞானாம்பிகை அம்மையார்

**Ref: NR IAS ACADEMY's Term Book, Pg.59**

39. திருவள்ளுவமாலையில் திருக்குறளைப் புகழ்ந்து பாடியுள்ள புலவர்கள் எத்தனைப் பேர்?
    **A. ஐம்பத்து மூவர்✓**
    B. எழுபத்தைவர்
    C. அறுபதின்மர்
    D. நூற்றுவர்

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.40**

40. '________' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப் பாம்பின் விடத்தை அப்பர் போக்கியருளினார்.
    A. உலகெலாம் **B. ஒன்றுகொலாம்✓**
    C. உலகம் யாவையும் D. திருமறையோர்

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.104**

41. பொருத்துக

| | நூல் | - | | நூலாசிரியர் |
|---|---|---|---|---|
| a. | களவழி நாற்பது | - | 1. | முன்றுறையரையனார் |
| b. | கைந்நிலை | - | 2. | பொய்கையார் |
| c. | கார் நாற்பது | - | 3. | புல்லங்காடனார் |
| d. | பழமொழி | - | 4. | கண்ணங்கூத்தனார் |



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

NR IAS ACADEMY

a b c d

**A. 2 3 4 1 ✓**

B. 1 2 3 4

C. 4 3 1 2

D. 3 1 2 4

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலாசிரியர் Pg.1**

42. 'அறுமோ, நரி நக்கிற்று என்று கடல்'? - இது பயின்று வந்த நூல் எது?

**A. பழமொழி ✓** B. நாலடியார்

C. திருக்குறள் D. ஆசாரக் கோவை

43. நான்காம் வேற்றுமை சொல்லுருபுகள் எவை?

A. கொண்டு, உடன்

**B. பொருட்டு, நிமித்தம் ✓**

C. இருந்து, நின்று D. உடைய

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.129**

44. பாஞ்சாலி சபதம் இலக்கியத்தில் 'குளிர்காவுஞ்' இதில் இடம்பெற்றுள்ள 'கா' என்பதன் பொருளைத் தேர்ந்தெடுக்க

A. சோலை B. பாலைவனம்

C. வயல் **D. காடு ✓**

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.32**

45. "நேர நிகர அன்ன இனன் என்பவும் பிறவும் உவமத் துருபே" என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A. தொல்காப்பியம்

**B. நன்னூல் ✓**

C. யாப்பருங்கலக் காரிகை

D. அகத்தியம்

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.120**

46. "அண்ணம் நுனிநா வருட" எவ்வெழுத்துகள் தோன்றும்?

**A. ரழ வரும் ✓**

B. தந வரும்

C. றன வரும்

D. யத் தோன்றும்

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.11**

47. னல முன்னும் ணள முன்னும் தநக்கள் புணரும் விதிப்படி பின்வருவனவற்றுள் எது சரி?

A. னல முன் டணவும் ணள முன் றனவும்

B. னல முன் றடவும் ணள முன் னணவும்

**C. னல முன் றனவும் ணளமுன் டணவும் ✓**

D. னல முன் றணவும் ணளமுன் டனவும்

**Ref: NR IAS ACADEMY's 11th Tamil Book, Pg.18**

48. "வித்தொடு சென்ற வட்டி" என்னும் நற்றிணை வரியில் குறிப்பிடப்படும் வட்டி என்பதன் பொருள் என்ன?

**A. பனையோலைப் பெட்டி ✓**

B. வயல்

C. வட்ட வடிவு

D. எல்லை

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.86**

49. ஆதிச்ச நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் எந்த காலகட்டத்தைச் சார்ந்தவை?

A. கி.மு. 200 முதல் கி.பி. 200 வரை

**B. கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை ✓**

C. கி.மு. 400 முதல் கி.பி. 400 வரை

D. கி.மு. 200 முதல் கி.பி. 300 வரை

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.137**

50. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான இணையைத் தேர்வு செய்க.

**A. தினங்களை கொண்டாடுவதை விடுங்கள் - கவிக்கோ ✓**

B. மண்புழுவல்ல மானிடனே - பாரதி

C. கன்று குரல் கேட்ட பசு - தாராபாரதி

D. தண்ணீர் போல் பணத்தை செலவு செய்தல் - ஆலந்தூரார்

**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Book, Pg.107**

51. புதிய பட வீழ்த்திகள் உருவாக <u>இவருடைய</u> கருத்துகளே அடிப்படையாக அமைந்துன

A. எட்வர்டு மைபிரிட்சு

B. ஈஸ்ட்மன்

C. தாமஸ் ஆல்வா எடிசன்

**D. பிரான்சிஸ் சென்கின்சு ✓**

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.113**

52. எந்த நாட்டின் அணுதுளைக்காத சுரங்கப் பாதுகாப்பு பெட்டகத்தில் திருக்குறள் உள்ளது

A. இங்கிலாந்து B. சிங்கப்பூர்

**C. உருசியா ✓** D. இந்தியா

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book,**

53. மறைமலையடிகள் எழுதிய நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்

A. மதங்க சூளரமணி B. மத்தவிலாசம்

**C. சாகுந்தலம் ✓** D. மனோன்மணீயம்

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.102**

54. "உழவர் ஏரடிக்கும் சிறு கோலே அரசரது செங்கோலை நடத்தும் கோல்" எனக் கூறியவர்

A. பாரதியார் B. பாரதிதாசன்

C. வில்லிப்புத்தூரார் **D. கம்பர் ✓**

**Ref: NR IAS ACADEMY's Term Extra, Pg.15**

55. "சூலியல் வின்சோன்" பாராட்டிய தமிழறிஞர்

A. திரு.வி.க. B. மறைமலையடிகள்

**C. உ.வே.சா. ✓** D. கவிமணி

**Ref: NR IAS ACADEMY's 6th Tamil Book, Pg.44**

56. "அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார் உளமனைய தண்ணளித்தாய் உறுவேளில் பரிவகற்றி" - இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் யாது?

**A. பெரியபுராணம் ✓**

B. திருவிளையாடற்புராணம்

C. சிலப்பதிகாரம்

D. சீறாப்புராணம்

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book,**



NR IAS ACADEMY

This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

Pg.105

57. 'அரிசி' என்னும் தமிழ்ச் சொல் 'ஓரைஸா' என எம்மொழிக்குச் சென்றது?
A. **கிரேக்கம்** ✓ B. இலத்தீன்
C. போர்ச்சுகீசியம் D. வடமொழி
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.58**

58. பேரறிஞர் அண்ணாவிற்கு விருப்பமான இலக்கியம்
A. **கலிங்கத்துப்பரணி** ✓
B. திருக்குறள்
c. கம்பராமாயணம்
D. பரிபாடல்
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.102**

59. "தமிழ் மொழி அழகான சித்திரவேலைப்பாடமைந்த வெள்ளித் தட்டு" என்று கூறியவர்
A. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
B. ஜி.யு. போப்
C. **டாக்டர் கிரௌல்** ✓
D. கால்டுவெல்
**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.6**

60. மன்னிப்பு - எம்மொழிச் சொல்
A. தமிழ் B. தெலுங்கு
C. மலையாளம் D. **உருது** ✓
**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.139**

61. "அறவுரைக் கோவை" என அழைக்கப் பெறும் நூல்
A. **முதுமொழிக்காஞ்சி** ✓ B. ஆசாரக் கோவை
C. ஏலாதி D. சிறுபஞ்சமூலம்
**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.19**

62. இங்கிலாந்து மகாராணி விக்டோரியா காலையில் கண் விழித்ததும் முதலில் படித்த நூல்
A. திருவருட்பா B. **திருக்குறள்** ✓
C. மகாபாரதம் D. இராமாயணம்
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.6**

63. குடிமக்கள் வரலாறே ஆதி காப்பியமாகத் தமிழ்நாட்டில் அமைந்து விளங்குகிறது அப்படி அமைவது எந்த நூல்?
A. சீவகசிந்தாமணி B. **சிலப்பதிகாரம்** ✓
C. மணிமேகலை D. கம்பராமாயணம்

64. எட்டுத்தொகை நூல்களில் 'நாடகப் பாங்கில்' அமைந்துள்ள நூலினைத் தேர்ந்தெடுத்து எழுதுக
A. குறுந்தொகை B. அகநானூறு
C. **கலித்தொகை** ✓ D. ஐங்குறுநூறு
**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.203**

65. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரே ஒரு நூலாசிரியர் மட்டும் இருநூல் படைத்துள்ளார். அவர் யார்?
A. கபிலர்
B. மூவாதியார்
C. நல்லாதனார்
D. **கணிமேதாவியார்** ✓

**Ref: NR IAS ACADEMY's நூல் நூலாசிரியர் Pg.1, 2**

66. "என்காற் சிலம்பு மணியுடை அரியே" இவ்வடிகளில் 'மணி' என்பது எதனைக் குறிக்கும் என்பதைத் தெரிவு செய்க.
A. பவளம் B. முத்து
C. **மாணிக்கம்** ✓ D. மரகதம்
**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.35**

67. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார்.
- இக்குறளில் பயின்று வரும் அணியை எழுதுக?
A. உவமையணி
B. நிரல்நிறை அணி
C. வேற்றுப் பொருள் வைப்பு அணி
D. **ஏகதேச உருவக அணி** ✓
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.116**

68. 'முட்டையிட்டது சேவலா, பெட்டையா'?
A. திணைவழு B. விடைவழு
C. மரபுவழு D. **வினாவழு** ✓
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.110**

69. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிதல் : மாணிக்கம், முத்து, பவளம், கிளிஞ்சல்.
A. மாணிக்கம் B. முத்து
C. பவளம் D. **கிளிஞ்சல்** ✓
**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.66**

70. சொல்லைப் பொருளோடு பொருத்துக

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| a. | வனப்பு | - | 1. காடு |
| b. | அடவி | - | 2. பக்கம் |
| c. | மருங்கு | - | 3. இனிமை |
| d. | மதுரம் | - | 4. அழகு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 2 | 1 | 4 | 3 |
| B. | 3 | 2 | 1 | 4 |
| **C.** | **4** | **1** | **2** | **3** ✓ |
| D. | 1 | 2 | 3 | 4 |

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.95**

71. உம்மைத்தொகையில் 'உம்' என்னும் இடைச்சொல் எவ்வாறு மறைந்து வரும் என்பதை தேர்ந்தெடு.
A. முதலில் வரும்
B. இடையில் வரும்
C. **இடையிலும் இறுதியிலும் வரும்** ✓
D. இறுதியில் வரும்
**Ref: NR IAS ACADEMY's 8h Tamil Book, Pg.73**

72. ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படு பொருளாக வேறுபடுத்துவது எவ்வகை வேற்றுமை எனத் தேர்ந்தெடு
A. மூன்றாம் வேற்றுமை
B. ஐந்தாம் வேற்றுமை
C. ஆறாம் வேற்றுமை
D. **இரண்டாம் வேற்றுமை** ✓



NR IAS ACADEMY
This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.121**

73. பின்வருவனவற்றுள் எது உருவகமன்று?
A. மொழியமுது B. அடிமலர்
C. தமிழ்த்தேன் **D. கயற்கண் ✓**
**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.121**

74. 'தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்' இக்குறள்பாவில் இடம்பெற்றுள்ள சீர்மோனை பெயரினைத் தேர்ந்தெடு.
A. கீழ்க்கதுவாய் மோனை
**B. கூழை மோனை✓**
C. ஒரூஉ மோனை
D. மேற்கதுவாய் மோனை
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.134**

75. பரிதிமாற்கலைஞருக்கு "திராவிட சாஸ்திரி" என்னும் பட்டத்தை வழங்கியவர்
A. மு.சி.பூர்ணலிங்கம்
**B. சி.வை.தாமோதரனார்✓**
C. மறைமலையடிகள்
D. திரு.வி.கலியாண சுந்தரனார்
**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.20**

76. 'எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி' என ஓவியச் சிறப்பைப் பழந்தமிழர் அறிந்திருந்ததைக் காட்டும் இவ்வடி இடம் பெற்ற நூல்
A.குற்றலாக் குறவஞ்சி
B. முல்லைப்பாட்டு
**C. மதுரைக் காஞ்சி✓**
D. திருமுருகாற்றுப்படை

77. 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' என அழைக்கப்படும் நகரம்
A. திருநெல்வேலி B. தஞ்சை
C. திருச்சி **D. மதுரை✓**
**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.70**

78. ஜவஹர்லால் நேரு சிறை வைக்கப்பட்டிருந்த அல்மோரா சிறைச்சாலை எந்த மாநிலத்திலுள்ளது என்பதை தெரிவு செய்க.
A. மேற்கு வங்காளம் B. குஜராத்
**C. உத்தராஞ்சல்✓** D. உத்தரபிரதேசம்
**Ref: NR IAS ACADEMY's 6th Tamil Book, Pg.42**

79. கண்ணதாசன் படைத்த நாடகம்
A. மாங்கனி
B. ஆட்டனத்தி ஆதிமந்தி
C. கல்லக்குடி மகா காவியம்
**D. இராசதண்டனை✓**
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.44**

80. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு. அயற்கூற்றில் வருவன
A. மேற்கொள்குறிகள் வராது
**B. தன்மை, முன்னிலைப் பெயர்கள் படர்க்கைப் பெயர்களாக மாறாது.✓**
C. அது, அவை - அங்கே என மாறும்.
D. காலப் பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும்.
**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.26**

81. "புத்தகம் வாாசிப்பதனை கடமையாக ஆக்குதல் கூடாது: கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படி செய்தால், புத்தகம் வாசிப்பு மகிழ்ச்சியைத் தராது" என்று கூறியவரை தேர்ந்தெடு.
A. டாக்டர். மு. வரதராசனார்
B. பேரறிஞர். அண்ணா
**C. நேரு✓**
D. காந்தி
**Ref: NR IAS ACADEMY's 6th Tamil Book, Pg.42**

82. பெரியாரின் வாழ்க்கை நிகழ்வுகளில் சரியானவற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | யுனெஸ்கோ விருது | 1. | 21,400 |
| b. | அஞ்சல் தலை | 2. | 10,700 |
| c. | பங்கேற்ற கூட்டங்கள் | 3. | 1970 |
| d. | உரையாற்றிய மணிநேரம் | 4. | 1978 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 1 | 2 |
| **B.** | **3** | **4** | **2** | **1✓** |
| C. | 2 | 3 | 4 | 1 |
| D. | 1 | 3 | 4 | 2 |

**Ref: NR IAS ACADEMY's 6th Tamil Book, Pg.27**

83. திருவிளையாடற் புராணத்தில் உள்ள காண்டங்களின் பொருந்தாத காண்டத்தின் பெயரினைத் தேர்ந்தெடு
A. மதுரைக் காண்டம்
B. கூடற்காண்டம்
**C. வஞ்சிக் காண்டம்✓**
D. திருவாலவாய்க் காண்டம்
**Ref: NR IAS ACADEMY's 9h Tamil Book, Pg.197**

84. "நரை முடித்துச் சொல்லால் முறை செய்தான்" இத்தொடரில் குறிப்பிடப்படுகின்ற அரசன் யார் என்று தேர்ந்தெடு
A. முதாலாம் குலோத்துங்கன்
B. இராசராசன்
**C. கரிகாலன்✓**
D. பராந்தகன்

85. 'மணிமேகலை' அமுதசுரபியைப் பெற்றிட உதவியவர்
A. மணிமேகலா தெய்வம்
B. சுதமதி
**C. தீவதிலகை✓**
D. அறவண அடிகள்
**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.59**

86. "சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே" இப்பாடல் வரிகளைப் பாடியவர் யார்?
A. முன்றுறை அரயனார்
B. காரியாசன்

NR IAS ACADEMY



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!

**C. மிளைகிழான் நல்வேட்டானார்✓**

D. கணிமேதாவியார்

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.86**

87. 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்று பாடலடி இடம்பெற்றுள்ள நூல்

A. ஆத்திச்சூடி B. நாலடியார்

**C. புறநானூறு✓** D. பழமொழிநானூறு

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.54**

88. 'போரை ஒழிமின்' என்ற கோவூர் கிழாரின் அறிவுரையைக் கேட்டு போரை நிறுத்திய மன்னர் யார்?

**A. நெடுங்கிள்ளி✓** B. நலங்கிள்ளி

C. அதியமான் D. சேரமான் நெடுமான் அஞ்சி

**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.25**

89. பெருவெடிப்புக் கொள்கையின்படி இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதைக் கூறும் பாடல் இடம்பெறும் நூல்

A. தேவாரம் **B. திருவாசகம்✓**

C. புறநானூறு D. பதிற்றுப்பத்து

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.157**

90. 'தேம்பாவணி' என்பது

**A. கிறித்துவக் காப்பியம்✓**

B. இசுலாமியக் காப்பியம்

C. வைணவக் காப்பியம்

D. சைவக் காப்பியம்

**Ref: NR IAS ACADEMY's 8th Tamil Book, Pg.98**

91. "தண்டமிழ் ஆசான்" என்று பாராட்டப் பெற்றவர்.

A. இளங்கோவடிகள்

B. கம்பர்

C. திருவள்ளுவர்

**D. சீத்தலைச்சாத்தானார்.✓**

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.129**

92. தமிழெண்களைக் கூட்டுக.

ருஅ+அ = ?

ருஅ + கூஅ = ?

(A) கூகஉ (B) ககூஉ

(C) கருக (D) கஉகூ

**Answer: D**

**Ref: NR IAS ACADEMY's Different pages**

93. ஆற்றீர் - பகுபத உறுப்பிலக்கணத்தின் படி எவ்வாறு பிரியும்?

அ. ஆற்று + ஈர் B. ஆறு + ஈர்

C. ஆ+இற்று+ஈர் **D. ஆற்று+ஆ+ஈர்✓**

**Ref: NR IAS ACADEMY's 12th Tamil Book, Pg.15**

94. தமிழ் ............ ஓசை மொழி

A. செப்பல் B. தூங்கல்

**C. மெல்✓** D. துள்ளல்

**Ref: NR IAS ACADEMY's 7th Tamil Book, Pg.7**

95. "சான்றாண்மை" அசை பிரித்துக் காட்டுதலில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

A. சா+ன்றா+ண்மை

**B. சான்+றாண்+மை✓**

C. சான்+றா+ண்மை

D. சான்+றாண்மை

**Ref: NR IAS ACADEMY's Class,**

96. புறத்திணைகள் ............... வகைப்படும்.

**A. பன்னிரெண்டு✓** B. ஏழு

C. ஐந்து D. ஒன்பது

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.190**

97. நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர் என்னும் தொடரில் 'ஐவர்' என்பதன் இலக்கணம் யாது?

**A. ஒன்றொழி பொதுச் சொல்✓**

B. இனங்குறித்தல்

C. தொடர்மொழி

D. பொதுமொழி

**Ref: NR IAS ACADEMY's 10th Tamil Book, Pg.79**

98. "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு" - இக்குறட்பாவில் பயின்ற வரும் அணி யாது?

**A. வேற்றுமையணி✓**

B. இல்பொருள் உவமையணி

C. ஏகதேச உருவக அணி

D. எடுத்துக்காட்டு உவமையணி

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.117**

99. "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்க முடையார்வாய்ச் சொல்" இக்குறட்பாவில் உள்ள உவமையின் பொருளை தேர்ந்தெடு

A. நிலம் - வாழ்க்கை

**B. ஊன்றுகோல் - பெரியோர் சொல்✓**

C. ஊன்றுகோல் - நிலம்

D. ஒழுக்கம் - வாய்ச்சொல்

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.38**

100. "பட்டியுள காளை படிபால் கறக்கமே நல்ல பசு வேளை தவிரா துழும்'' இப்பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள பொருள்கோள் வகையினை தேர்ந்தெடு.

A. அடிமாறிமாற்றுப் பொருள்கோள்

**B. கொண்டு கூட்டுப் பொருள்கோள்✓**

C. மொழிமாற்றுப் பொருள்கோள்

D. விற்பூட்டுப் பொருள்கோள்

**Ref: NR IAS ACADEMY's 9th Tamil Book, Pg.69**

NR IAS ACADEMY



This PDF was created using Adolix PDF Converter PRO Demo . Register to remove this watermark!